2013 அக்டோபர் 28]

இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு நன்மையைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**38—**

**கால்நடை மருத்துவமனை**

***22533—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம், வெங்களூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர், காரைக்குடி தொகுதி, கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம், வெங்களூரிலே கால்நடை மருத்துவமனை அமைக்க கோரிக்கை வைத்திருக்கிறார்கள். வெங்களூரிலே கால்நடை பராமரிப்புத் துறையினுடைய விதிப்படி 3,000 கால்நடைகள் இருப்பதாலும், 3 கி.மீ. தொலைவு இருப்பதாலும் அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க*

மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மாவை மாதா பிதா குரு தெய்வம் என்ற நான்கையும் ஒருருவாய் இங்கே நாடு பார்க்கிறது. ஈரோட்டுப் புயல், காந்தித் தென்றல் இரண்டும் கலந்ததாய் ஈகையுடைய தாயை உலகம் பார்க்கிறது. பூக்களுக்கும் புன்னகை போதித்த புரட்சித் தலைவராக பொன்மனத் தாயை பூவுலகமே பார்க்கிறது. அல்லாடும் மக்களை அரவணைக்கும் அன்னை தெரசா வடிவில் அன்புலகம் பார்க்கிறது. மக்கள் பசி தீர்க்கின்ற மருத்துவராம் மாதரசியை அன்னலட்சுமி என்று அகிலமே பார்க்கிறது. 130 கோடி இந்தியரை நுண்ணறிவால், நுண்புலத்தால், பொன் மனத்தால் வழிநடத்த வருகை தரும் நுண்ணறிவுப் பெட்டகமே என ஆறறிவு மனித இனம் அறிவோடு பார்க்கிறது. தாய்நாட்டை வழிநடத்த தமிழர்க்கோர் வாய்ப்பு என்று தரணியே பார்க்கிறது. விழித்தெழு தமிழினமே, விடையிருக்கிறது தாயிடமே என்று கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்கும் முன்னே விடை தெரியும் என்பதைப்போல, இன்றைக்கு நான் கேட்ட கேள்விக்கு விடையாக அங்கே கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும், தேவகோட்டை ஒன்றியம், கீழஉச்சாணி பகுதியில் அரசு விதிகளுக்குட்பட்டு 15,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலிருந்து மக்கள் கால்நடை மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்றால், திருவெம்புத்தூர் 9 கி.மீ. தூரத்திலும், ஆலந்தூர் 7 கி.மீ. தூரத்திலும் இருக்கிறது. ஆகவே, அங்கேயும் ஒரு கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தித் தரவேண்டும். அதேபோல, 25,000 கால்நடைகளுக்கு மேலே சாக்கோட்டை ஒன்றியம், பையாவயல் பகுதியில் இருக்கின்றன. அங்குள்ள மக்கள் பயனடைய வேண்டுமென்றால் 9 கி.மீ. தூரமுள்ள திருக்கள்ளிக்காடு பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

2013 அக்டோபர் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: துணைக் கேள்வி ஒன்று கேளுங்கள். இன்னொரு துணைக் கேள்வியும் கேட்கலாம். மூலக் கேள்வி நீங்கள்தானே கேட்டிருக்கிறீர்கள்?

**திரு. சோழன் சித. பழனிச்சாமி:** மேலும் இரண்டு இடங்களிலே மருத்துவமனை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற கிராமங்களிலெல்லாம் என்னுடைய துறை ஆய்வுசெய்து, தேவைப்படுமென்றால், கிளை மருத்துவமனைகள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. சோழன் சித. பழனிச்சாமி**: மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், விராலிக்காட்டில் 5,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. எனவே, அங்கே கால்நடை துணை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக்

கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறை விதிகளுக்குட்பட்டு கால்நடைகளின் எண்ணிக்கை இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் மற்றும் திரு. ரா. சரத்குமார். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**39—**

## சரிகை ஆலையை சீரமைத்தல்

*5703—**திரு. வி. சோமசுந்தரம்:**
**திரு. ரா. சரத்குமார்:**

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலையைச் சீரமைத்து, உற்பத்தியைப் பெருக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*காஞ்சிபுரத்தில் இயங்கும் சரிகை ஆலையைச் சீரமைத்து உற்பத்தியைப் பெருக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மாவினுடைய அரசால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சரிகை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன், மூலப்பொருட்களை ஒப்பந்தப்புள்ளிமூலம் கொள்முதல் செய்யும் கால அளவான 45 நாட்களுக்கு ஒரு முறை என்ற நடைமுறையை மாற்றி, 15 நாட்களுக்கு ஒரு முறை ஒப்பந்தப்புள்ளி கோரும் நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் சரிகை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் தடையின்றிக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் விற்பனை யாவும் ஆலை வாயில் விலை திட்டத்தின்படி* (Mill Gate Price Scheme) *தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதால், பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் இந்தத் திட்டத்தின்மூலம் 2.5 விழுக்காடு விலையில்*